பக்கங்கள் : ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 சித்திரை 28 வெள்ளிக்கிழமை (11.05.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 165

## புலிகளின் வான்படையை புகழ்ந்து ஆற்றிய உரையால் சர்ச்சை

# நாடாளுமன்றத்தில் அமளி துமளி!

# கஜேந்திரன் வெளியேற்றப்பட்டார்!!

## கைதுசெய்யக்கோரி ஜே.வி.பியினர் ஆர்ப்பாட்டம்; எதிர்த்தும் ஆதரவாகவும் அமைச்சர்கள் விவாதம்





கொழும்பு, மே 11

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் நேற்று நாடாளுமன்றத்திலிருந்து இடைநடுவே வெளியேற்றப்பட்டார்.**

அவசரகாலச் சட்ட நீடிப்பு பிரேரணை மீதான விவாதத்தில் நேற்றுமுன்தினம் கஜேந்திரன் ஆற்றிய உரையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் படையை மெச்சும் விதத்தில் தெரிவித்த கருத்துகள் பெரும் சர்ச்சையையும், வாதப் பிரதிவாதங்களையும் கிளப்பிவிட்டன. இதனால் நேற்று நாடாளுமன்றம் பெரும் அமளி துமளிப்பட்டது. அடிக்கடி ஒத்திவைக்கப்பட்டது. அவசரமாக கட்சித் தலைவர்கள் கூட்டமும் கூட்டப்பட்டது. கஜேந்திரனைக் கைதுசெய்யுமாறு கோரி ஜே.வி.பியினர் சபை நடுவே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

அரசமைப்பையா, நாடாளுமன்ற நிலையியற் கட்டளைகளையா மதிப்பது என்ற கோணத்தில் பலத்த வாதப் பிரதிவாதங்களும் தூள் பறந்தன. கட்சித் தலைவர்களுடன் ஆலோசித்த பிறகு கஜேந்திரன் எம்.பியை சபையிலிருந்து வெளியேற்றுமாறு சபாநாயகர் உத்தரவிட்டார். புலிகளைப் புகழ்ந்ததற்காக அவர் மன்னிப்புக் கோரவேண்டும் என்று ஜே.வி.பி. மற்றும் அரச தரப்பு எம்.பிக்கள் விடாது வற்புறுத்தினர். மன்னிப்புக் கோர மறுத்த கஜேந்திரன் சபையிலிருந்து வெளியேறினார்.

விடுதலைப்புலிகளின் வான் படையைப் புகழ்ந்தமைக்காக கஜேந்திரன் மீது நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமா என்பது தொடர்பில் அமைச்சர்கள் சிலரும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அணி பிரிந்து ஆதரவாகவும், எதிர்த்தும் வாதம் புரிந்தனர்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராஜாகஜேந்திரன் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் அவசரகாலச் சட்டத்தை நீடிப்பது தொடர்பான விவாதத்தில் ஆற்றிய உரை தொடர்பாக ஏற்பட்ட சர்ச்சை நேற்று நாடாளுமன்றத்தை சுமார் மூன்று மணி நேரங்கள் அல்லோல கல்லோலப்படுத்தி விட்டது.

நேற்றுக் காலை நாடாளுமன்றம் கூடிய போது ஜே.வி.பி. பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ஸ சபையில் கவன ஈர்ப்புப் பிரேரணை ஒன்றை முன்வைத்தார்.

''நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் பயங்கரவாதத்திற்கு ஆதரவாகவும், பிரிவினைவாதத்தை ஆதரித்தும் பேசினார். விடுதலைப்புலிகளின் குண்டுவீச்சுகளையும் வான் தாக்குதல்களையும் நியாயப்படுத்தினார்.

''இலங்கை அரசமைப்பின் ஆறாவது திருத்தத்திற்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் அனைவரும்

(06ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

முல்லைத்தீவு, மே 11

இலங்கை விமானப் படையின் மிக் தாக்குதல் விமானங்கள் இரண்டு நேற்றுக் காலை 8.15 மணியளவில் வன்னியில் குண்டு வீச்சை நடத்தியுள்ளன. முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பகுதியில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. சேதவிவரங்கள் உடனடியாகத் தெரியவரவில்லை.

மிச் விமானங்கள் மிகத் தாழப் பறந்து தாக்குதலை நடத்தியதாகவும் இதனால் மக்களிடையே பீதி கிளம்பியதாகவும் கர்ணன் குடியிருப்பு மக்கள் தெரிவித்தனர். (சி)

## இணைத்தலைமைகளுக்கு பௌச்சர் விளக்கம்

கொழும்பு, மே 11

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இணைத் தலைமைகளின் கூட்டம் நேற்று கொழும்பில் நடைபெற்றது.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் பௌச்சரும் இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டார். ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கூட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்தியத் தூதுவர் அலோக் பிரசாத்தும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்தார்.

(06ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிடமிருந்து இலங்கைக்கு ராடர்கள்

கொழும்பு, மே 11

இந்தியாவிடமிருந்து புதிய தொழில் நுட்பங்களைக் கொண்ட ''3D'' ரக 'ராடர்'களைக் கொள்வனவு செய்ய இலங்கை அரசு தீர்மானித்திருக்கின்றது.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் புதுடில்லியில் இடம்பெற்ற இந்தியப் பாதுகாப்பு அதிகாரிகள் மாநாட்டில் ஆராயப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க கடந்த 6ஆம் திகதி இந்தியா சென்றவேளை விடுத்த வேண்டுகோளுக்கிணங்கவே இந்த ராடர்களை வழங்குவது தொடர்பாக பரிசீலிக்கப்படுவதாக இந்திய அதிகாரிகளை மேற்கோள் காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## தமிழ்ச் சமூகத்தினர் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை அரசு ஏற்படுத்த வேண்டும்

### அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் பௌச்சர்



கொழும்பு, மே 11

இலங்கையில் தமிழ்ச் சமூகத்தினர் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும். எனது இலங்கை விஜயத்தின் போது குடாநாட்டுக்கும் சென்றேன். யாழ்.மக்கள் அச்சத்துடனேயே வாழ்கின்றனர். ஆள்கள் கடத்தப்படுதல், காணாமற்போதல் நாளாந்தம் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

தமது மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொள்ளும் தறுவாயில், நேற்று மாலை நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில், அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் பௌச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அமெரிக்க உதவி ராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் தமிழ் சமூகம் நிம்மதியாக வாழும் சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டும். நான் இலங்கை விஜயத்தின்போது யாழ். குடாநாட்டுக்கும் விஜயம் செய்தேன். அங்கு பொதுமக்கள் உட்பட பல்வேறு தரப்பினருடன் சந்தித்துப் பேச்சு நடத்தினேன். யாழ்.மக்கள் அச்சத்துடனேயே வாழ்க்கை நடத்துகின்றனர். மீன்பிடித் தடை, ஆள்கள் கடத்தப்பட்டு காணாமற்போகின்றமை குறித்தும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது. சமீபத்தில் ஆறு பேர் கடத்தப்பட்டமை தொடர்பாகவும் என்னிடம் தெரிவிக்கப்பட்டது.

**மனித உரிமை மீறலில் ஆழ்ந்த கரிசனை**

இலங்கையில் மனித உரிமை மீறல், பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுகின்றமை, அச்சுறுத்தப்படுகின்றமை, ஊடகசுதந்திரம் என்பன குறித்து அமெரிக்கா

(06ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகளைப் பகைத்துக் கொண்டு எந்தத் தீர்வையும் காண முடியாது

### நிலைத்து நிற்காது என்கிறார் ரணில்



கொழும்பு, மே 11

இந்தியா உட்பட வெளிநாடுகளைப் பகைத்துக்கொண்டு எந்தத் தீர்வையும் இலங்கையில் நடைமுறைப்படுத்த முடியாது. இது அரசுக்குப் புரியவில்லை.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை கம்பளை நகரில் நடைபெற்ற கட்சியின் பிரசார கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''வெளிநாடுகளைப் பகைத்துக்கொண்டு எந்தத் தீர்வையும் இலங்கையில் கொண்டு வர முடியாது. அவ்வாறு காணப்படும் எந்தத் தீர்வும் நிலையானதாகவும் இருக்காது.

''அரசு பலவீனப்பட்டும் விடுதலைப் புலிகள் பலம் பெற்றும் வருகின்ற நிலையில் மீண்டும் பேச்சுக்குச் செல்வதில் பயன் ஏற்படப்போவதில்லை.

''கருணா குழுவும் தமிழீழ விடுதலைப் புலிகளும் மீண்டும் ஒன்றுபடும் நிலை ஏற்பட்டு வருகின்றது'' என்று அவர் மேலும் தெரிவித்தார். (சி)

## குடாநாட்டில் மாணவர்களுக்கு மரணதண்டனை எச்சரிக்கை!

### கல்விச் சமூகத்தில் பெரும் பதற்றம்

கொழும்பு, மே 11

யாழ். நகரின் சில முக்கிய பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, அவர்கள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் குற்றம் சுமத்தி, அவர்களுக்கு இறுதி எச்சரிக்கை வெளியிட்டு, அவர்கள் பயங்கரவாதிகளுடன் சேர்ந்து மேலும் நாசகார வேலைகளில் ஈடுபட்டால் அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படும் என்று அறிவிக்கும் துண்டுப் பிரசுரம், குடாநாட்டில் நேற்று பரவலாக விநியோகிக்கப்பட்டது.

'நாட்டைக் காக்கும் தமிழர் கூட்டமைப்பு - யாழ். மாவட்டம்' என்ற பெயரில் இந்தத் துண்டுப் பிரசுரம் அமைந்திருந்தது.

இதில் நான்கு பாடசாலைகளைச் சேர்ந்த பதினாறு மாணவர்கள் மற்றும் ஓர் ஆசிரியரின் பெயர்கள் குறிப்பிடப்பட்டிருந்தன.

இவர்கள் பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் (06ஆம் பக்கம் பார்க்க)

**மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர்
## வே.வீரபத்திரபிள்ளை (இலங்கை நிர்வாக சேவை) அவர்களின்
## சேவை நலன் பாராட்டுச் சிறப்புமலர் (11.05.2007)

### அரசாங்க அதிபரின் வாழ்த்துச் செய்தி



அர்ப்பணிப்புடன், ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் பொதுச்சேவையில் தன்னை இணைத்துக் கொண்ட வே.வீரபத்திரபிள்ளையின் பண்பு பாராட்டிற்குரியது. எப்பொழுது எந்த வேலையைக் கொடுத்தாலும் மறுபேச்சின்றி ஏற்றுக்கொண்டு பணியாற்றும் பண்பு ஏனையோருக்கு முன்னுதாரமாகக் கொள்ளத்தக்கது. பதவிக்கேற்ப வினைத்திறனை வெளிப்படுத்தல் என்பதற்கு மாறாக வினையாற்றும் திறனால் பதவிகள் தேடிவந்த பெருமை இவருக்கே உரியதெனலாம். குறிப்பாக இலங்கை நிர்வாக சேவையில் 19.09.2004ஆம் திகதியே இணைந்து கொண்டாலும் 10.10.1988ஆம் திகதி முதல் அச்சேவைக்குத் தகுந்தவராகவே பணியாற்றிக்கொண்டிருந்தார் எனலாம்.

இனிவரும் காலங்களில் மனதுக்கு இனிய வேலைச்சூழலிலும் குடும்ப சூழலிலும் எல்லோருக்கும் இனியவராய் நல்லாசானாய் வழிகாட்டியாய் சமூகத்தின் பயனுறுதித் தன்மையை மேம்படுத்தும் வகையில் வாழ வாழ்த்துக்கள் பல்லாண்டு வாழ்க.

**கே.கணேஸ்**
அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலர்,
யாழ். மாவட்டம்.

### அறிவும் ஆற்றலும் சேவை உணர்வும் மிக்க சேவையாளன்



யாழ். மாவட்டத்தில் உடுவில் உதவி அரசாங்க அதிபராகப் பதவி வழங்கப்பட்டு அரிய பணி புரிந்தார். கரவெட்டிப் பிரதேச செயலகம், பருத்தித்துறைப் பிரதேச செயலகம் போன்றவற்றிலும் அவரது நற்பணி தொடர்ந்தது. யாழ். மாவட்டத்தில் நெருக்கடி நிலைமை காரணமாக வீதிப்போக்குவரத்துத் தடைப்பட்டிருந்த வேளையில் மயிர்க்கூச்செறியும் சம்பவங்களுக்கு மத்தியில் பருத்தித்துறைத் துறைமுகத்தில் கப்பல் சரக்குகள் கையாளப்படும் பணியில் தன்னலம் பாராது ஆற்றிய உன்னதமான சேவையையும் நினைவு கூருகின்றேன். யாழ். மாவட்டத்தில் தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபராக இருந்து பிரதேச செயலகங்களுக்கும் மாவட்ட செயலகத்துக்கும் ஆற்றிய பணிகள் போற்றப்படவேண்டியவை. பின்னர் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் பணிபுரிந்த அவர், யுத்த சூழ்நிலை காரணமாக இப்பணிமனையைக் கிளிநொச்சி மாவட்டத்தில் தர்மபுரத்துக்கு இடம்மாற்றி நெருக்கடியால் பாதிப்புற்ற மக்களுக்கும் அலுவலர்களுக்கும் நற்பணியாற்றி உதவிபுரிந்தார். பின்னர் விடுவிக்கப்பட்ட பகுதியில் குடத்தனை உப அலுவலகப் பணிமனைக்கு வந்து தனது பணியைத் தொடர்ந்து ஆற்றி விரைவில் அரச பணியிலிருந்து ஓய்வுபெறவுள்ளார். இவரது ஆற்றலும் அறிவும் தொடர்ந்தும் ஏனையவர்களுக்கு உதவுவதாக இருக்குமென்பதில் ஐயமில்லை. அவர் மேலும் பல்லாண்டுகள் நலமாக வாழ்ந்து சமூகத்துக்கும் அரச பணியாளர்களுக்கும் உதவவேண்டுமென விரும்புகின்றேன். அவரும் அவரது குடும்பத்தினரும் சீரும் சிறப்புமாக நலமுடன் வாழ இறைவன் அருள் புரியவேண்டுகிறேன்.

**ஆ. சிவசுவாமி**
மேலதி அரசாங்க அதிபர்
யாழ்ப்பாணம்.



### சேவை நலன் பாராட்டு

அறுபது அகவையை 12.05.2007இல் பூர்த்திசெய்து ஓய்வுபெறும் உதவி
அரசாங்க அதிபர் வே.வீரபத்திரபிள்ளை (S.L.A.S.)
உதவி அரசாங்க அதிபர்
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி

ஆரம்பக்கல்வி: யா/ புற்றளை மகாவித்தியாலயம், புலோலி
உயர்கல்வி: யா/ விக்கினேஸ்வராக் கல்லூரி, கரவெட்டி,
யா/நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம்

**சேவை விபரம்**

கல்வித்திணைக்களம் - பொலனறுவை பொது எழுதுநர் 01.12.1968-30.04.1969
கல்வித்திணைக்களம் - கல்முனை பொது எழுதுநர் 01.05.1969 - 22.01.1970
கல்வித்திணைக்களம் - மட்டக்களப்பு பொது எழுதுநர் 23.01.1970 -30.09.1971
கல்வித்திணைக்களம் - அம்பாறை பொதுஎழுதுநர் 01.10.1971 - 30.06.1972
கல்வித்திணைக்களம் -மட்டக்களப்பு பொதுஎழுதுநர் 01.07.1972-31.12.1973
கல்வித்திணைக்களம் -நுவரெலியா பொதுஎழுதுநர் 01.01.1974-31.12.1975
பரீட்சைத் திணைக்களம் - கொழும்பு பொதுஎழுதுநர் 01.01.1976-30.05.1977
புடைவைக் கைத்தொழில் அமைச்சு - கொழும்பு பொதுஎழுதுநர் 01.06.1977-31.12.1984
சந்தைப்படுத்தும் திணைக்களம் - யாழ்ப்பாணம் பொதுஎழுதுநர் 01.01.1985-29.10.1985
உதவி அரசாங்க அதிபர் பணிமனை - முல்லைத்தீவு நிர்வாக உத்தியோகத்தர் 30.10.1985-31.12.1985
மாவட்டச் செயலகம் - முல்லைத்தீவு நிர்வாக உத்தியோகத்தர் 01.01.1986-09.09.1986
மாவட்டச் செயலகம் - கிளிநொச்சி நிர்வாக உத்தியோகத்தர் 10.09.1986-09.10.1988
உதவி அரசாங்க அதிபர் பணிமனை கிளிநொச்சி உதவி அரசாங்க அதிபர் 10.10.1988-28.02.1989
ஆளுநர் செயலகம் திருகோணமலை நிர்வாக உத்தியோகத்தர் 01.03.1989-07.10.1990
உதவி அரசாங்க அதிபர் பணிமனை உடுவில் உதவி அரசாங்க அதிபர் 08.10.1990-31.05.1991
பருத்தித்துறை துறைமுகம் நிர்வாக உத்தியோகத்தர் 01.06.1991 - 06.12.1991
மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம் நிர்வாக உத்தியோகத்தர் 07.12.1991-01.03.1993
உதவி அரசாங்க அதிபர் பணிமனை- கரவெட்டி நிர்வாக உத்தியோகத்தர் 01.04.1993-02.06.1997
பிரதேச செயலகம் - பருத்தித்துறை நிர்வாக உத்தியோகத்தர் 03.06.1997-06.07.1997
பிரதேசசெயலகம் - கரவெட்டி நிர்வாக உத்தியோகத்தர் 07.07.1997-27.07.1998
பிரதேச செயலகம் - யாழ்ப்பாணம் நிர்வாக உத்தியோகத்தர் 30.07.1998-01.07.2003
பிரதேசசெயலகம் - கரவெட்டி உதவி பிரதேச செயலர் 02.07.2003-20.02.2004
உதவி அரசாங்க அதிபர் தலைமைப்பீடம்
மாவட்டச் செயலகம் -யாழ்ப்பாணம் - உதவி அரசாங்க அதிபர் 21.02.2004 - 26.05.2006
உதவி அரசாங்க அதிபர் பணிமனை - உதவி அரசாங்க அதிபர் 29.05.2006 - 12.05.2007
மருதங்கேணி.

### செயல் வீரர்

'இதனை இவனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன் கண் விடல்' என்கின்றது வள்ளுவம்



போரினால் புழுதியாக்கப்பட்டும் சுனாமியால் சூறையாடப்பட்டும் வடமராட்சி கிழக்கு வளமனைத்தும் இழந்திருந்த நிலையில் மீண்டும் இப்பகுதி கட்டியெழுப்பப்படவேண்டும் என்ற வகையில் அரச சேவையில் நான்கு தசாப்தங்களை நிறைவு செய்கின்ற காலத்தை அண்மித்த நிலையில் பல இடங்களில் பல பதவிகளை அலங்கரித்திருந்த உயர்திரு வே.வீரபத்திரப்பிள்ளை அவர்கள் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் உதவி அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டார்.

கடந்த 11.08.2006 இல் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதை மூடப்பட்டதால் இப்பிரதேசம் இரு கூறுகளாகப் பிரிந்த நிலையில் செம்பியன் பற்றுத் தொடக்கம் சுண்டிக்குளம் வரையான மக்கள் இடப்பெயர்வு, சொத்து இழப்பு போன்ற பல்வேறு துன்பங்களை அனுபவிக்க நேர்ந்த வேளையில் அப்பகுதியிலேயே நின்று அப்பகுதி மக்களின் உடனடித் தேவைகளை நிறைவு செய்த செயல் வீரர். மிகுதியாக உள்ள அம்பன் தொடக்கம் மணற்காடு வரையான பிரதேச மக்களின் நிலையறிய அங்கிருந்து இவ்விடம் வந்து இம்மக்களின் தேவைகளை நிறைவு செய்து சிறந்த சேவையை ஆற்றிவருகின்றார்.

இவ்வாறான ஒரு செயல்வீரர் அரச சுற்று நிருபத்திற்கமைவாக நாளை (12.05.2007) இல் இளைப்பாறுகின்றார். மனத்தாலும் உடலாலும் இளைக்காத இச்செயல் வீரர் தொடர்ந்தும் சளைக்காமல் மக்கள் சேவையைத் தொடரவேண்டுமெனவும் அதற்கான நீண்ட ஆயுளையும் நல்ல தேகாரோக்கியத்தையும் இறைவன் வழங்கவேண்டுமெனவும் பிரார்த்திக்கின்றோம்.

கூட்டுறவுச் சேவையில் உள்ள
**பொ.ஸ்ரீராமச்சந்திரன்**
பொது முகாமையாளர், வடமராட்சி கிழக்கு ப.நோ.கூ. சங்கம்
மருதங்கேணி.

### ஆளுமையால் அனைவரதும் அன்பைப் பெற்றவர்



தொழில்சார்ந்த ஆற்றல் அமைவதற்கு அத்துறை தொடர்பான அறிவும் அனுபவமும் ஒருவருக்கு அவசியமாகின்றது. அந்த வகையில் வீரபத்திரபிள்ளை ஐயா அவர்கள் தன்துறை சார்ந்த ஆளுமையால் அனைவரது அன்பையும் மதிப்பையும் தனதாக்கிக் கொண்டார்.

சமூகத்தில் அரசசேவையிலும் கனக்கக் கதைக்காது கனக்கச் சாதிக்கலாம் என்பதை நிதர்சனமாகக் காட்டியவர். எங்கும் எதிலும் எவ்விடத்தும் அமைதியாகவும் சாந்தியுடனும் பணியாற்றி எங்கள் எல்லோருக்கும் முன் உதாரணமாகத் திகழ்பவர்.

38 வருட அரச சேவையைப் பூர்த்தி செய்து ஓய்வுபெறுகின்ற வே.வீரபத்திரபிள்ளை ஐயா அவர்கள் ஒரு இளைஞனுக்கான சுறுசுறுப்புடன் விளங்குவதால் புதிய துறையில் தனது பணியைத் தொடரவேண்டும் என்றும் நீண்டகாலம் தமது திறமைகளை பிறருக்கு வழங்கவேண்டுமென்றும் மறுபுறத்தில் குடும்பத்தில் நிறைவான வாழ்க்கையை வாழவேண்டும் என்றும் எல்லாம் வல்ல வல்லிபுரத்தானை வேண்டியே உளமார வாழ்த்துகின்றோம்.

**த.கணேசமூர்த்தி**
நிர்வாக உத்தியோகத்தர்,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை
வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி.

**வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனை உத்தியோகத்தர்கள்**

---

### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
### வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
### முக்கிய அறிவித்தல்
**வெளிவாரிப் பரீட்சைகள் - 2006**
**வணிக முதற்தேர்வு - 2004 & 2005**

மேற்படி தேர்வுகளுக்கான பின்வரும் துணைப்பாட அலகுகளுக்கான (Ancillary Subjects) பரீட்சைகள் 19.05.2007 (சனிக்கிழமை) 1.30 தொடக்கம் 4.30 வரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள இராமநாதன் மண்டபத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பரீட்சார்த்திகள் ஏற்கனவே வழங்கப்பட்ட பரீட்சைக்குரிய அனுமதி அட்டையுடன் சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**பாட அலகுகள்**

01. அடிப்படைக் கணிதம் (EX.BM.1.0)
02. சுற்றுப்புறச் சூழற்கல்வி (EX.ES.1.0)
03. அளவையியலும் விஞ்ஞான முறைகளும் (EX.LS.1.0)

மேலதிக விவரங்களுக்கு 021 2223612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்புகொள்ளலாம்.

பதிவாளர்.
08.05.2007 (சி-52338)

## Appreciation

### A Gem of a Principal
### Mr.P.Kamalanathan

Mr. P.Kamalanathan stepped into Kokuvil Hindu College on 25.09.1996 as a Principal. A dawn of a new era. Kokuvil Hindu College took a new dimension under his able and dynamic leadership. Unprecedented developments in all fields. His tenure of office as a principal is a golden age in the history of Kokuvil Hindu College. A remarkable achievement of his was, he became the principal of this reputed institution where he received his education. He is a role model. The glory of our college is at its peak today, due to his efficient administration and outstanding contributions.

A person of great dedication, personality, and caliber. He belongs to a galaxy of eminent principals. He is stepping down from office on 13.05.2007. Teachers and students will always remember his selfless service with a deep sense of gratitude and love. I warmly wish him a happy and a peaceful retired life.

By Mr. K.Rasanayagam,
A Veteran English Teacher
and a Well Wisher.

### தென்னிந்திய திருச்சபை
### யாழ். ஆதீனம்
### சமயக் கல்விக் குழு

★ தொடர் கருத்தமர்வு III - கிறிஸ்தவம்
★ காலம் : நாளை (12.05.2007) சனிக்கிழமை
காலை 9 மணி - 12 மணிவரை
★ இடம் : யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு,
யாழ்ப்பாணம் (ஆஸ்பத்திரி முன்பாக)

விடயம் :
**நான்கு நற்செய்திகள்**

★ கருத்துரை வழங்குபவர் :
T.I. றங்கநாயகம்
(ஆசிரியர், யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்)

★ 2007 ஒகஸ்ட் க.பொ.த. (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் சகல பாடசாலை மற்றும் தனியார் பரீட்சார்த்திகளையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
★ பாடக்குறிப்புகள் இலவசமாக வழங்கப்படும்.

ஒருங்கிணைப்பாளர்,
சமயக்கல்விக் குழு,
பரீட்சைகள் பிரிவு.

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள வீட்டுத் தளபாடங் கள், மின்சார உபகரணங்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள் என்பன உடன்விற்பனைக்கு உண்டு.

பார்வையிட விரும்புவோர் 12.05.2007 சனி காலை 8 - 5 மணிவரை கீழுள்ள முகவரியில் பார்வையிடலாம். 'வனச', சின்னத்தம்பி அவெனியு, மானிப்பாய். தொ.பே. 222 7766.

### அஸ்ரன் கல்வி நிலையம்

நவாலி வீதி, ஆனைக்கோட்டை.
T.P. 021 222 4031, 0714304766.

★ தரம் - 06, 07, 08 English Medium வகுப்புகள் ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

★ Spoken English with Grammar வகுப்புகள் நடைபெறுகின்றன.

A/L 2009 கலை, வர்த்தக பிரிவுக்குரிய ஆசிரியர்கள் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும்.

- நிர்வாகி.

### சேவை நலன் பாராட்டு விழா

எமது பாடசாலையில் 25 வருடங்கள் சேவையாற்றி
2007.04.12 இல் ஓய்வுபெற்ற பகுதித் தலைவர்
திருமதி லலிதாதேவி மகாலிங்கம் அவர்களுக்கு
2007.05.11 வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை சமூகத்தினர் அமைதியான முறையில் சேவை நலன் பாராட்டு விழா நடத்த எண்ணியுள்ளோம். அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. பாடசாலை சமூகம்.

## மரண அறிவித்தல்கள்

### பொன்னம்பலம் சோமசுந்தரம்



(ஓய்வுபெற்ற ஆய்வுகூட உதவியாளர்
பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி)

மூளாயைப் பிறப்பிடமாகவும் மாதகலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் சோமசுந்தரம் 08.05.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சரஸ்வதி தம்பதியரின் மகனும் காலஞ்சென்ற நவரத்தினம் - முத்துக்குட்டி தம்பதியரின் மருமகனும், அம்பிகாவதியின் அன்புக்கணவரும் தவஈஸ்வரி, தபேசன் ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற வசந்தகுமார் மற்றும் வினோதா ஆகியோரின் மாமனும் கனாதீபன் விக்சனா, திவாகர், சரண்ஜா, சங்கவி ஆகியோரின் பேரனும் காலஞ்சென்ற முத்துக்குமாரசாமி மற்றும் பரமேஸ்வரி, மகாதேவராசான், சந்திரசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகசுந்தரம், காலஞ்சென்றவர்களான நடராசா, இரத்தினசிங்கம், கந்தசாமி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.05.2007 புதன்கிழமை நடைபெற்றது. இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
விபுலானந்தர் வீதி, குடும்பத்தினர்.
மாதகல். சோ. தபேசன்
0776094232 (கல்விசாரா ஊழியர், சண்டிலிப்பாய், இந்துக் கல்லூரி)

### பத்மநாதன் இந்திராணி

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட பத்மநாதன் இந்திராணி 08.05.2007 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குலசேகரப்பிள்ளை மற்றும் பரிமளம் தம்பதியரின் அன்பு மகளும், பவளராணி, புஸ்பராணி, தேவராணி, விஜியராணி, றஞ்சன், றஞ்ஜினி, காலஞ்சென்ற பாமாதேவி ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 09.05.2007 புதன்கிழமை வவுனியாவில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கணக்கர் வளவு, தகவல்:
கந்தரோடை. சி. துரைசிங்கம் (அத்தான்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீது திட்டமிட்டுப் பழி சுமத்தவே தமிழக மீனவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்

## அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் செவ்வி

கொழும்பு,மே11

புலிகள் மீது திட்டமிட்டுப் பழி சுமத்துவதற்காகவோ தமிழக மீனவர்கள் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்.

தமிழகத்தில் வெளிவரும் 'ஜூனியர் விகடன்' வார இதழுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் வழங்கிய செவ்வியின் விவரம் வருமாறு -

விடுதலைப் புலிகள் மீது வீண் பழி சுமத்துவதன் மூலம் தமிழக மீனவர்கள் படுகொலையுடன் சம்பந்தப்பட்டவர்கள் தப்பித்துச் செல்ல இடமளித்துவிடக்கூடாது.

காணாமற்போயுள்ள தமிழக மீனவர்களைக் கண்டுபிடிக்கத் தமிழக அரசசோடு முழு மனதுடன் ஒத்துழைக்கத் தயாராகவுள்ளோம்.

குமரிமாவட்ட மீனவர்கள் கொலை செய்யப்பட்டமை, தமிழகத்தைச் சேர்ந்த மீனவர்கள் கடத்திச் செல்லப்பட்டமை தொடர்பாகப் புலிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை நாங்கள் முழுமையாக மறுக்கின்றோம்.

ஐந்து மீனவர்கள் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்திலும் 12 மீனவர்கள் கடத்தப்பட்ட சம்பவத்திலும் இலங்கை கடற்படைதான் சம்பந்தப்பட்டுள்ளது என்பதுதான் எமது விசாரணைகள் மூலம் கிடைத்துள்ள தகவல்.

புலிகள் மீது திட்டமிட்டுப் பழி சுமத்துவதற்காகவே இலங்கைக் கடற்படை இப்படியான ஒரு காரியத்தைச் செய்துள்ளது.



இந்த விவகாரத்தில் என்ன நடந்தது? நடக்கிறது என்பனவெல்லாம் விரைவில் அப்பட்டமாக வெளியுலகுக்குத் தெரிய வரும் போது புலிகள் மீது பொய்மை வாரி இறைக்கப்பட்டிருப்பதை உலகம் உணரும்.

பாதிக்கப்பட்ட தமிழக மீனவர்களுக்கு நாங்கள் உதவுவோம். இவ்விடயத்தில் எமது தலைமை கரிசனத்தோடும் அக்கறையோடும் இருக்கிறது. மீனவர்கள் கடத்தல் நாடகத்திலும் கொல்லப்பட்ட சம்பவத்திலும் என்ன நடத்தது என்பதை உலகுக்குத் சொல்ல நாங்கள் ஆர்வத்துடன் காத்திருக்கிறோம் - என்று தெரிவித்துள்ளார்.

(203)

### அரியாலையில் கால்நடை வைத்திய உபநிலையம்

யாழ்ப்பாணம்,மே11

யாழ்.பெரும்பாக கால்நடைவைத்திய அதிகாரி பிரிவினரால் பிரதி செவ்வாய், சனிக்கிழமைகளில் அரியாலை தபால்கட்டைச் சந்தியில் கால்நடை வைத்திய உபநிலையம் ஒன்று நடத்தப்பட்டுவருகிறது.

முற்பகல் 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை இந்த நிலையம் இயங்கும் எனவும்-

இந்த நேரத்தில் கால்நடைகளுக்கான சிகிச்சை வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சனிக்கிழமைகளில் விசேடமாக கோழிகளுக்குத் தடுப்பூசி ஏற்றல், தடுப்புமருந்து கொடுத்தல் போன்றன இடம்பெறுகின்றன.

இதேவேளை - இந்நிலையத்தில் செயற்கை முறைச்சினைப்படுத்தல் சேவையும் நடைபெறுகின்றது என்றும் கால்நடை வைத்திய அதிகாரி பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

(203)

### கண்டெடுக்கப்பட்ட கைக்கடிகாரம்

யாழ்ப்பாணம், மே.11

யாழ்.போதனா வைத்தியசாலையின் வளாகத்தினுள் பெண்களின் கைக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டு அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்களை ஆதாரம் காட்டிப் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(203)

## 77 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை 16 வருடங்களில் சுட்டுக்கொன்றது

### இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் தகவல்

புதுடில்லி,மே11

கடந்த 16 வருடங்களில் 77 தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக்கொன்றனர் என்று பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே.அன்ரனி அறிவித்துள்ளார்.

மாநிலங்கள் அவையில், உறுப்பினர் சி. பெருமாள் எழுப்பிய கேள்விக்கு எழுத்து மூலமாக அளித்த பதிலில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

1991ஆம் ஆண்டு தொடக்கம் 2007ஆம் ஆண்டு ஏப்ரல் நடுப்பகுதிவரை 77 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையால் சுட்டுக்கொல்லப்பட்டுவருவதனை மத்திய அரசு அவதானித்து வருகின்றது. பாக்.ஜல சந்தி, மன்னார் வளைகுடா, ஆகிய பகுதிகளில் இத்தகைய தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

இந்தத் தாக்குதல்களில் இருந்து மீனவர்களை பாதுகாக்க கண்காணிப்புப் பணிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

இத்தாக்குதல்கள் குறித்து இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டு சென்றுள்ளோம். தமிழக மீனவர்களை மனிதாபிமானமாக நடத்துமாறும் இலங்கை அரசிடம் கேட்டுள்ளோம். - என்றார் அவர்.

(அ-1)

### கிரிக்கெட் போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்,மே11

அரியாலை ஸ்ரீ கலைமகள் விளையாட்டுக் கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட 12 ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களை அரியாலை ஸ்ரீ கலைமகள் சனசமூக நிலையம், நியூலக்கி ஹாட்வெயார்(ஸ்ரான்லிக் கல்லூரி முன்பாக), வெலா சலூன்(கல்வியங்காடு) ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

(202)

### தனியார் வாகனங்கள் வாடகைக்கு அமர்த்தப்படும்

யாழ்ப்பாணம்,மே11

வட இலங்கை புற்றுநோயாளர் நலன் நோன்பு சங்கம் நோயாளர்களை ஏற்றி இறக்குவதற்கென தனியாரிடமிருந்து வாகனங்களை வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவுள்ளது.

வாகனங்களை வாடகைக்கு வழங்க விரும்புவோர் பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் இயங்கும் சங்கத்துடன் தொடர்பு கொண்டு மேலதிக விவரங்களைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(202)

### பேராசிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரை

யாழ்ப்பாணம்,மே11

யாழ். தேசிய கல்வியல் கல்லூரியின் ஏழாவது ஆண்டு நிறைவு விழாவையொட்டி பேராசிரியர் அ.துரைராஜாவின் நினைவுப் பேருரை நாளை சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது.

பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக விவசாய பீட இயந்திரவியல் துறைத் தலைவர் திருமதி துஷ்யந்தி மிகுந்தன், யாழ். 'குடாநாட்டின் தரைக்கீழ் நீரும் அதன் தன்மையும்' எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்துவார்.(203)

## கொலை செய்யப்பட்ட உதயன் பணியாளர்கள் மூவரின் பெயர்கள் பிரெஞ்சு நினைவுத் தூபியில்

### எல்லை இல்லாத பத்திரிகையாளர் அமைப்பு ஏற்பாடு

பாரிஸ்,மே11

2006ஆம் ஆண்டில் தொழில் செய்துகொண்டிருக்கும்போதே கொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கல் ஒன்று பிரான்ஸிலுள்ள பேயூக்ஸ்(Bayeux) நகரில் திரை நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

சர்வதேச பத்திரிகை சுதந்திர தினமான மே 2ஆம் திகதியை ஒட்டி அத்தினத்திற்கு முதல்நாள் திறந்து வைக்கப்பட்ட அந்நினைவுக் கல்லில் கடந்த வருடம் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே விஷமிகளால் கொல்லப்பட்ட உதயன் பத்திரிகைப் பணியாளர்கள் சதாசிவம் பாஸ்கரன், ஜோர்ஜ் சகாய தாஸ் (சுரேஷ்), ரஞ்சித்குமார் ஆகியவர்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

பிரான்ஸின் பேக்யூக்ஸ் நகரப் பிரமுகர்ளும் எல்லைகளற்ற செய்தியாளர்கள் அமைப்பும் இணைந்து இந்த நினைவு தூபியை அமைத்துள்ளன.

உலகப்போரின்போது முதன் முதலில் விடுவிக்கப்பட்ட பிரெஞ்சு நகரம் பேயூக்கஸ் ஆகும். இங்கு ஏற்கனவே நோர்மண்டி போர், நேசப்படைகள் வந்திறங்கிய சந்தர்ப்பம் பற்றிய நுண்பொருள் காட்சியகமும் ஜெனரல் டிகோல் பற்றிய நுண்பொருள் காட்சியகமும் அமைந்துள்ளன. 1944 ஆம் ஆண்டுக்குப் பிறகு தமது தொழில் சார்பாக மரணத்தை சந்தித்துள்ள பத்திரிகையாளர்களின் பெயர்கள் அடங்கிய கற்பலகை அங்கு ஏற்கனவே வைக்கப்பட்டுள்ளது. தொழில் செய்கையில் மரணமான பத்திரிகையாளர்களைக் கௌரவிக்கும் இந்த ஏற்பாடு ஐரோப்பாவில் தனித்துவமான ஓர் அம்சமாகும்.

சாமுவல் கிராங்குவின் என்ற சூழல் படவரைஞரும் கட்டடக் கலைஞருமான ஒருவரால் இக்கற்பலகை வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒருபுறம் அழகான இயற்கைக் காட்சியையும் மறுபுறம் பத்திரிகையாளர்களின் பெயர்களையும் கொண்டு இக்கற்பலகை அமைந்துள்ளது.



ஜோர்ஜ் சகாயதாஸ் | ரஞ்சித்குமார் | பாஸ்கரன்

(ப)

### விளையாட்டு விழா

சுழிபுரம்,மே11

சங்கானை ஜூப்பிற்றர் முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

ஜூப்பிற்றர் கழக உப தலைவர் பா.சிறீபவன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தெல்லிப்பழை கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கைலாசநாதன் கலந்துகொள்வார்.

(203-28)

### தென்மராட்சியில் மரக்கறிகளின் விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணம்,மே11

கொடிகாமம், சாவகச்சேரிச் சந்தைகளில் கடந்த சில நாள்களாக மரக்கறிகளின் விலைகள் பெரு வீழ்ச்சியடைந்துள்ளன.

பயிற்றங்காய், முருங்கக்காய் என்பன கிலோ 10 ரூபாவாகவும் கத்தரிக்காய் கிலோ 20 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. ஏனைய மரக்கறிகளின் விலைகளும் வீழ்ச்சியடைந்துள்ளன.

(202)

### திருநாவுக்கரசு நாயனார் குருபூசை நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே11

யாழ்.சைவ பரிபாலன சபையினர் நடத்தும் திருநாவுக்கரசு நாயனார் குருபூசை இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை மாணவர்கள் பஞ்சபுராணம் ஓதல், திருநாவுக்கரசு நாயனார் தேவாரம் ஓதல் போன்ற நிகழ்வுகளைச் செய்யவுள்ளனர்.

(203)

## பத்திரிகையாளர் பலர் கொல்லப்பட்ட பின்னரும் குற்றவாளிகள் எவருமே கைதுசெய்யப்படவில்லை

### யாழ். பத்திரிகையாளர் நிலை குறித்து ஆலோசகர் ஹென்றிக் கவலை

யாழ்ப்பாணம்,மே 11

யாழ்ப்பாணத்தில் பத்திரிகைப் பணி பயங்கரமான பணியாகும். இவ்வளவு கொலைகள் நடந்த பின்பும் யாரும் கைது செய்யப்படவில்லை குற்றம் சாட்டப்படவுமில்லை. இது விடயத்தில் நாம் கவனமாக இருக்கவேண்டும்.

இவ்வாறு போஜோ நிறுவனத்தின் சர்வதேச ஆலோசகர் ஹென்றிக் குருன்னெற் (Henrick Grunnet)கூறினார்.

யாழ். பல்கலைக்கழகமும், ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி நிலையமும் இணைந்து மனித உரிமைகள், பெண் உரிமைகள் மற்றும் சுகாதாரம் தொடர்பாக விசேடமாக ஊடகங்களுக்கு செய்தி சேகரித்தல், அறிக்கை இடுதல் தொடர்பான பயிற்சிப் பட்டறை ஒன்றை நேற்றுமுன்தினம் யாழ். ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பயிற்சி நிலையத்தின் இணைப்பாளர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் ஹென்றிக் குருன்னெற் மேலும் பேசுகையில் கூறியதாவது-

'டன்டா' நிறுவனத்தில் இணைந்து பணியாற்றிய நான் கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் வந்து நீண்டகாலம் தங்கியிருந்து ஊடக வளங்கள் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைந்தேன் அதன் பின்னர் அடிக்கடி நான் யாழ்ப்பாணம் வந்துள்ளேன். எனது சொந்த வீட்டை அடுத்து யாழ்ப்பாணம் எனது இரண்டாது வீடுபோல அமைந்துள்ளது.

இப்பயிற்சி நிலையத்தில் முதலில் கற்கைநெறியினை ஆரம்பித்து முடிவடைந்துள்ளது. தற்போதும் ஊடகக் கற்கை நெறி இடம்பெற்று வருகிறது. ஊடகம் தொடர்பாக இன்னும் பல கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இப்பணியில் இணைந்துள்ள யாழ். பல்கலைக்கழகத்திற்கும் எனது நன்றிகள்

யாழ்ப்பாணத்தில் உள்ள பத்திரிகையாளர்களுக்கு ஊடக வளங்களை ஏற்படுத்திக் கொடுத்தல் அவர்களுக்குப் பயிற்சிகளை வழங்குவது இதுவே எமது குறிக்கோளாகும்.

இன்றைய காலகட்டத்தில் மனித உரிமைகள், பெண்கள் உரிமைகள் மற்றும் சுகாதாரம் தொடர்பாக செய்தி சேகரிப்பது முதன்மையானது. அதிலும் யாழ்ப்பாணத்தில் மனித உரிமைகள் இப்போது முதன்மையானது. ஊடகவியலாளர்கள் அதிகாரிகள் மனித உரிமைகள் பற்றி தகைக்கத் தெரியவேண்டும்.

ஊடகவியலாளர்கள் உயிரைப் பணயம் வைக்கும் அளவுக்கு பணிசெய்யவேண்டாம். உயிரை வெறுக்கும் அளவுக்கு பணி முக்கியமல்ல. யாழ்ப்பாணத்தில் பத்திரிகைப் பணி என்பது பயங்கரமான பணியாகும். இவ்வளவு கொலை நடந்தபின்பும் யாரும் கைது செய்யப்படவுமில்லை. குற்றம் சாட்டப்படவுமில்லை இது விடயத்தில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் ஓர் அங்கமாக பத்திரிகையாளர் இருக்கிறார்கள். ஆனாலும் கவனமாக இருக்கவேண்டும் சர்வதேச சமூகத்தைதான் குற்றம் சாட்டவேண்டும். மிகவும் கவலைக்குரியது. நான் ஐரோப்பாவில் இருக்கும்போது இலங்கை விடயம் எதுவும் தெரியாது. ஈராக்குக்கு அடுத்த படியாக அதிக பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்பட்டிருப்பது இந்நாட்டில்தான். இவ்விடயத்தை நாம் வெளிக்கொணவேண்டும். சட்டம், ஜனநாயகம் மதிக்கப்படவேண்டும். இருப்பினும் சில விடயங்களில் விசேட கவனம் செலுத்தவேண்டும். ஒரு செய்திக் கதை ஒரு உயிருக்கு சமமானதல்ல என்றார்.

யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் குமாரவடிவேல், கலைப்பீடாதிபதி இரா.சிவச்சந்திரன் ஆகியோரும் ஆரம்ப வைபவத்தில் உரையாற்றினார்கள்.

(ப-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தியேட்டி அழைப்பு



### சின்னத்தம்பி புவனேந்திரன்

(கொழும்பு றெயிலர்)

| தாயின் மடியில் | ஆண்டவன் மடியில் |
|---|---|
| 31.07.1941 | 18.03.2007 |

கடந்த 18.03.2007 ஆம் திகதி சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று(11.05.2007) வெள்ளிக் கிழமை காலை 7 மணியளவில் அவரின் இல்லத் தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

நட்சத்திர பவனம்,
அல்வாய் தெற்கு, வதிரி.

(60332)

- குடும்பத்தினர்.

## என்றென்றும் இதயமதில் ஆறாண்டுகள் ஆராதனை



அமரர்

### நாகலிங்கம் பொன்னம்பலம்

மண்ணில் 07.03.1920 விண்ணில் 18.04.2001

திதி : 11.05.2007

அன்புத் தந்தையே ஆரத் தழுவிய தெய்வமே!
இன்றுடன் நீயேகி ஈர்மூன் றாண்டானதே!
கண்ணிலே கருவிழியாய் கலந்தாடும் எந்தையே
விண்ணிலே மீனாகி விழிக்கின்றாய் எம்மையே!

'கேணிக்கரை',
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

(60435)

மனைவி, மக்கள்
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்



### கபிரியேல் அருளப்பு

(ஓய்வுபெற்ற யாழ். மாநகர சபை மின்சாரப் [illegible] திட்ட ஊழியர்)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஈச்சமோட்டை வீதி, கண்டிக்குளி யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கபிரியேல் அருளப்பு 08.05.2007 செவ்வாய்க்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கபிரியேல் - சீதை தம்பதியினரின் மகனும் திரேசம்மா அவர்களின் அன்புக் கணவரும் அன்ரனிப்பிள்ளை (அன்ரன்) இம்மானுவேல்(பபா - யாழ். மாநகர சபை), டேவிற்(டலாஸ்), அல்பேட்(ராசன்), மேரி ஒடேற்றா(மல்லிகா - இத்தாலி), றெஜினோல்ட்(சிறீ - பிரான்ஸ்), யோண்சன்(பிரான்ஸ்), மேரிபெல்சியா(கொன்சி - பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் பொன்றோஸ், திரேசா டெய்சி, கலிஸ்டா (சந்திரா), நேசமலர் (ராகினி), அலெக்ஸ்(ஞானசீலன் - இத்தாலி), டோறா(பிரான்ஸ்), துஷா(பிரான்ஸ்), சகாயநாதன்(வின்சன் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் செல்லக்கண்டு, கந்தசாமி, சூசைநாதர்(கிளி - அமெரிக்கா), காலஞ்சென்றவர்களான றோசம்மா, ராசு, சின்னத்துரை, மணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும் சியாமளா(டென்மார்க்), சிஸ்ரெலா, சிறிஸ்ரீனா(கனடா), சிறிசீலன் (டோகா), றெஜிதா, நிரோஷன், லிவிங்ஸ்ரன், மெலின்டா(திருச்சிலுவை மருத்துவமனை), பிரதிக்கா, பிரவீனா, பிரவீன், பிரகாஷ், பிரசாந், ஜெகன்(இத்தாலி), றஜனி(இத்தாலி), றபேக்கா(இத்தாலி), ஜெஸ்லி(இத்தாலி), தர்சினி (பிரான்ஸ்), ஏஞ்சல்(பிரான்ஸ்), இவாஞ்சலி(பிரான்ஸ்), றஜீவ்(பிரான்ஸ்), லக்சியா(பிரான்ஸ்), சஞ்சீவ் (பிரான்ஸ்), கெபின்(பிரான்ஸ்) ஆகியோரின் பேரனுமாவர்.

அன்னாரின் இறுதி ஆராதனை அவரது இல்லத்தில் இன்று (11.05.2007) வெள்ளிக்கிழமை முற் பகல் 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கோப்பாய் கானான் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.05, ஈச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.

(60613)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### நாகமணி ஐயாத்துரை

தோற்றம்
18.03.1934

மறைவு
05.05.2002

தீராத வேதனையால் தினந்தினம் துடிக்கின்றோம்
மாறாத சோகத்திலே ஐந்தாண்டுகள்
கழிந்தனவே. வேராக நீரிருந்த எம் குடும்பம்
இன்று உம்மை நினைத்து
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்...

ஊரெழு கிழக்கு,
சுன்னாகம்.

(60404)

- குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



முன்னாள் நகர சபைத் தலைவர்
அமரர் பாலசுப்பிரமணியம் (சேமன் கோபால்) அவர்களின் அன்புத் துணைவி

### பாலசுப்பிரமணியம் இராசலட்சுமி (மம்மி)

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 18.12.1924 | 21.05.2006 |

(11.05.2007)

அன்பின் உறைவிடமே
பாசத்தின் பிறப்பிடமே
குடும்பத்தின் குலவிளக்கே
என்றுமே எமக்கென மெழுகாய் உருகியவளே!
இன்றுடன் ஓராண்டு நிறைவானதே அம்மா!
உம் இனிய வதன முகமும் நினைவுகளும்
எம்மை விட்டு என்றுமே நீங்காதம்மா

எமது அன்புத் தெய்வத்தின் ஓராண்டு நினைவுப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கோயில் குடியிருப்பு,
கந்தையா வீதி, சாவகச்சேரி

(60419)

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்(ஜெனா).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## ஐ.தே.க. வெளியிடும் கவலை

கடந்த ஒன்றரை வருட காலத்துக்குள் விடுதலைப் புலிகளின் இராணுவப் பலத்தைப் பெரிதும் உடைத்துவிட்டோம் என்று இலங்கை அரசு மார்தட்டி மேற்கொண்ட பிரசாரத்தினதும், அதற்கு ஒத்து ஊதிய தென்னிலங்கை ஊடகங்களினதும் குட்டைப் போட்டுடைத்திருக்கின்றது ஐக்கிய தேசியக் கட்சி.

நாட்டின் நிலைமை குறித்து அக்கட்சி நேற்றுமுன்தினம் வெளியிட்ட பகிரங்க அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

''ஒவ்வொரு இராணுவ நடவடிக்கையின் பின்னரும் புலிகளின் இராணுவ வலிமை முடிவுற்று விட்டதாகப் பாதுகாப்பு அமைச்சும் ஊடகங்களும் நாட்டுக்கு அறிவித்து வந்தன. ஆனால் இன்று புலிகளின் இராணுவ வலிமை பாதுகாப்பாக - உடையாமல் இருப்பது மட்டுமல்ல, உலகில் தனியான விமானப்படையைக் கொண்ட ஒரே பயங்கரவாத இயக்கமாகத் தமது வான் வலிமையையும் அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியிருக்கின்றார்கள்.'' - என்று ஐக்கிய தேசியக்கட்சி சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அத்தோடு போரியல் முனைப்பில் நிற்கும் அரசின் இராணுவத் தந்திரோபாயத் தவறையும் அக்கட்சி சுட்டிக்காட்ட விழைகின்றது.

''அரசியல் இலக்குகளை அடைவதற்கு இராணுவ வலிமையைப் பயன்படுத்துவது பற்றிய அடிப்படைக் கோட்பாட்டைக் கூடப் புரிந்துகொள்ளமுடியாதவராக இருக்கிறார் பாதுகாப்புச் செயலாளர். அவரே இந்த (அரசின் இராணுவப்) பின்னடைவுகளுக்குப் பிரதான பொறுப்பானவராவார். இதன் விளைவாகப் பேச்சு மேசையில் புலிகளைப் பலப்படுத்தி, அரசைப் பலவீனப்படுத்தியிருக்கின்றது ராஜபக்ஷ அரசு'' என்றும் ஐ. தே. கட்சி சுட்டிக்காட்டியிருக்கின்றது.

கள யதார்த்தங்களைப் புரியாது - முன்னைய அரசுகளுக்குப் பட்டறிவாகக் கிடைத்த இராணுவத் தந்திரோபாயத் தோல்விகளிலிருந்து விடயங்களைக் கிரகித்துக்கொள்ளத் தவறி - தனது எதிர்த்தரப்பின் கொள்கைப் பற்றுறுதி, இலக்கு மீதான திடசங்கற்பம், பிடிவாதம் போன்றவற்றை விளங்கிக்கொள்ளாமல் - போரியல் செருக்கோடு காய்களை நகர்த்தியதன் விளைவாகப் பேச்சு மேசையில் தன்னை இந்த அரசு பலவீனப்படுத்தியுள்ளதோடு, புலிகளைப் பலப்படுத்தி யுமிருக்கின்றது.

எனவே இது விடயத்தில் பிரதான எதிர்க்கட்சியான ஐ. தே. கவின் கணிப்பீடு சரியானதே.

ஆனால், அரசியல் இலக்குகளை அடைவதற்கு இராணுவ வலிமையைப் பயன்படுத்துவது பற்றிய அடிப்படைக் கோட்பாடு புரியாமல்தான் அரசின் பாதுகாப்புச் செயலாளர் இவ்வாறு காய்களை நகர்த்துகின்றார் என்ற கணிப்பீடு பொருத்தமானதல்ல.

அந்தக் கோட்பாட்டைக் குறுகிய சுய அரசியல் லாபங்களுக்கும் பயன்படுத்தலாம் என்ற குயுக்தி சிந்தனை இருப்பதால்தான் அந்த வழியை நாடுகிறது அரசு என்பதே உண்மை.

விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் களத்தில் எட்டப்பட்டவை என்று பெரிதுபடுத்திக் காட்டப்படும் வெற்றிகள், புலிகளுக்கு எதிரான அரசியல் இலக்குகளை அடையப் பயன்படுமா என்ற யதார்த்தம் குறித்து அவர்கள் சிந்திப்பதாகவில்லை.

ஆனால், மாறாக, அவ்வாறு தமிழ்ப் புலிகளுக்கு எதிராக பூதாகாரப்படுத்திக் காட்டப்படும் அரசுப்படையின் வெற்றிகள், தென்னிலங்கையில் தமது அரசியல் எதிரிகளை முடக்கி, தமக்குக் குறுகிய அரசியல் இலாபமாக பௌத்த - சிங்களப் பேரினவாதப் போக்குடைய பெரும்பான்மை மக்களிடமிருந்து பெருஞ் செல்வாக்கையும், பேராதரவையும் பெற்றுத்தரும் என்ற தந்திரம் ஆட்சித் தலைமைக்கு நன்கு புரிகிறது.

புலிகளுக்கு எதிரான போராட்டத்தில் சர்வதேச ஆதரவைத் திரட்டுவதில் மஹிந்த ராஜபக்ஷ அரசு தோல்வி கண்டுவிட்டது என்றும் ஐ.தே.கட்சி விசனத்தோடு குறை கூறியிருக்கின்றது.

தமிழர்களின் இனப்பிரச்சினைக்கு அமைதி வழியில் - சமாதான முறையில் - தீர்வு காண்போம் என்று கூறிக்கொண்டு, தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளான புலிகளை சமரசப் பேச்சுக்கு ஒருபுறம் இழுத்து அழைத்து, காலத்தை இழுத்தடித்துக்கொண்டு, மறுபுறத்தில் சர்வதேச சமூகத்தின் தலையீடு, நெருக்குவாரம் போன்றவை மூலம் புலிகளைக் கட்டுப்படுத்தி அமுக்கும் அந்தரங்க சதித்திட்டம் ஒன்றை 'சர்வதேச வலைப் பின்னல்' என்ற பெயரில் அப்போதைய ஐ.தே.க. அரசு முன்னெடுத்தது.

ஆனால், அந்தவலைப் பின்னலையே பிய்த்து உதறிச் சின்னா பின்னமாக்கி விட்டது மஹிந்தரின் அரசு என்பது ஐ.தே. கட்சியின் கவலை.

அமைதி முயற்சிகளைப் புறந்தள்ளுவதை அப்பட்டமாக வெளிப்படுத்தி -

போரியல் முனைப்பில் மூர்க்கமாக இருப்பதைப் பகிரங்கமாகக் காட்டி-

ஆட்கடத்தல்கள், கப்பம் அறவிடல், காணாமற் போகச் செய்தல், சிறுவர்களைப் படைக்குச் சேர்த்தல் போன்ற கொடூர மனித உரிமை மீறல்களில் அரசுப்படைகளை சம்பந்தப்படவைத்து, அரச பயங்கரவாதம் அம்பலமாக இடமளித்து -

ஊடக சுதந்திரத்தை நசுக்குவதை வெளிவெளியாக மேற்கொண்டு -

ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் வகையிலான செயற்பாடுகளுக்கு நேரடியாக அனுமதித்து -

சர்வதேச மட்டத்தில் தனது அரசின் பெயரையும் நாட்டின் பெயரையும் மஹிந்த அரசு கெடுத்துக் கொண்டிருப்பது ஐ.தே. கட்சியை விசனமுற வைத்திருக்கின்றது.

ஆட்சியதிகாரத்துக்கு ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை விட ஸ்ரீ. ல. சு. கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ வருவதே பொருத்தமானது என தமிழ்த் தரப்பில் என்ன காரணத்துக்காக - நோக்கத்துக்காக - கருதப்பட்டதோ, அது யதார்த்தத்தில் முறையாகவும், செவ்வனேயும் நடந்தேறுகின்றது என்பதையே ஐ. தே. கவின் விசனத்துடன் கூடிய தற்போதைய குற்றச்சாட்டுகள் எடுத்தியம்புகின்றன.

'எது நடக்கவேண்டுமோ அது நன்றாகவே நடக்கின்றது!'

# உயிர் அச்சுறுத்தலால் சரணடைந்தவர்களில் 34 பேர் பிரதம நீதியரசரின் பணிப்பில் நேற்று விடுவிப்பு

யாழ்ப்பாணம்,மே 11

குடா நாட்டில் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்தவர்களில் 34 பேர், யாழ்.நீதிமன்றத்தால் பிணையில் நேற்று விடுவிக்கப்பட்டனர்.

உயிர் அச்சுறுத்தல் காரணமாகச் சரண் அடைந்தவர்களில் பெரும் பாலானவர்கள் தங்களை வீட்டுக்குச் செல்ல அனுமதிக்குமாறு நீதிமன்றத்தில் கோரியிருந்தனர்.

புனர்வாழ்வு ஆணையாளர் கம்லத்தின் பணிப்பின் பேரில்தான் அவர்களை விடுவிக்க முடியும் என்று நீதிமன்றம் தெரிவித்திருந்தது.

அவர்கள் 45 பேரும் நேற்று யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா முன் ஆஜர் செய்யப்பட்டனர்.

அவர்கள் சார்பில் சட்டத்தரணிகளான மு.திருநாவுக்கரசு, எஸ்.சிவநேசன், வி.ரி.சிவலிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

இவர்களில் வீடுசெல்ல விரும்புபவர்களை அனுமதிக்குமாறு அவர்கள் நீதிவானிடம் கோரினர்.

புனர்வாழ்வு ஆணையாளரின் அனுமதி கிடைக்காத நிலையில், நீதிவான் பிரதம நீதியரசரின் கவனத்துக்கு இவ் விடயத்தை கொண்டு சென்றார்.

அதனைத் தொடர்ந்து பிரதம நீதியரசர் தொலைபேசி மூலம் அறிவுறுத்தல் ஒன்றை யாழ்.நீதிவானுக்கு விடுத்தார்.

சரணடைந்தவர்கள் தொடர்பில் அவர்களை முற்படுத்திய பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடமிருந்து சரணடைந்தவர்களை நீதிமன்ற பாதுகாப்பிலிருந்து விடுவிப்பதற்கு ஆட்சேபனை இருக்கிறதா என்பதை எழுத்துமூலம் பெறுமாறும் -

ஆட்சேபனை இல்லை எனின் அவர்களை நெருங்கிய இரத்த உறவினர் ஒருவரின் பிணைமுறி நிறைவேற்றல் மூலம் விடுவிக்குமாறும் -

குறித்த பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி ஆட்சேபனை தெரிவிப்பின் ஆட்சேபனைக்கான காரணத்தை பதிவு செய்து, குறித்த ஆட்சேபனை தொடர்பில் மன்றுக்கு திருப்தி ஏற்படின் அவர்களை விடுவிக்காது ஆட்சேபனை தொடர்பில் சட்டத்தின் தேவைப்பாட்டிற்கு அமைய உரிய நடவடிக்கை எடுக்குமாறு குறித்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கு மன்று கட்டளையிட வேண்டும் என்றும் -

குறித்த ஆட்சேபனை தொடர்பில் மன்று திருப்திப்படாது விடின் மன்றுக்குள்ள தற்றுணிவு அதிகாரத்தைப் பிரயோகித்து ஆட்சேபனை இல்லாத வரை விடுவிப்பது போல் விடுவிக்குமாறும் பிரதம நீதியரசர் அறிவுறுத்தியிருந்தார்.

பிரதம நீதியரசரின் அறிவுறுத்தலுக்கு ஏற்ப, 34 பேரையும் தலா 15 ஆயிரம் ரூபா பிணையில் இரத்த உறவுக் காரர்கள் கூட்டிச் செல்ல யாழ். நீதிவான் உத்தரவிட்டார்.

ஒன்பது பேர் வீடு செல்ல விரும்பாததால் அவர்களை தொடர்ந்து நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இருவர் தொடர்பாக பொலிஸார் ஆட்சேபனை தெரிவித்ததால் அவர்களையும் நீதிமன்றப் பாதுகாப்பில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

(அ-1)

## பௌச்சரிடமிருந்து அரசுக்கு 'சூடான' செய்தி

கொழும்பு, மே 11

இலங்கையில் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவது உட்பட அமெரிக்கா கரிசனை கொண்டுள்ள நான்கு முக்கிய விடயங்கள் அடங்கிய 'சூடான' செய்தி ஒன்றை அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் பௌச்சர் நேற்று ஜனாதிபதியிடம் நேரில் தெரிவித்தார் என்று இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

மத்திய மற்றும் தெற்கு ஆசிய விவகாரங்களுக்கான உதவி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் பௌச்சர் தனது இலங்கை விஜயத்தின் இறுதியில் நேற்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

இலங்கையில் அதிகரித்துவரும் மோதல்கள் மற்றும் களநிலைவரம் குறித்து அமெரிக்கா கொண்டிருக்கும் தீவிர கவலையை பௌச்சர் அப்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார் என்று கூறப்படுகிறது.

* சகல பிரஜைகளினதும் அடிப்படை மனித உரிமைகளைப் பேணுவதையும், நீதி, சட்டத்தின் அடிப்படையில் அவற்றை நிலைநிறுத்திக் காட்டுவதையும் இலங்கை அரசு வெளிப்படையாக உறுதிப்படுத்தவேண்டும்.
* ஊடக சுதந்திரத்தை மதித்துப் பேணுதல் மற்றும் ஊடகவியலாளர்கள், ஊடக நிறுவனங்களின் பாதுகாப்பு -
* மனித உரிமை மீறல்கள் தொடர்பான விசாரணைகளில் வெளிப்படையாகச் செயற்படுதல் மற்றும் சர்வதேச விசாரணையாளர்களின் ஒத்துழைப்பு -
* போர்ப் பிரதேசங்களில் தொண்டுப் பணியாளர்களின் மனிதாபிமானப் பணிகள், மக்களைச் சென்றடைவதில் உள்ள தடைகள், தொண்டு நிறுவனப் பணியாளர்களின் பாதுகாப்பு -

- ஆகிய நான்கு விடயங்களில் அமெரிக்கா கொண்டிருக்கும் தீவிர கரிசனையை சற்று சூடான தொனியில் அரசுத் தலைமையிடம் பௌச்சர் வெளிப்படுத்தினார் என்று தகவல் அறிந்த இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பில் தாம் வலியுறுத்திய விடயங்களை றிச்சர்ட் பௌச்சர் பின்னர் வெளிநாட்டு இராஜதந்திரிகளுடன் பகிர்ந்து கொண்டார் என அறியவந்தது.

(சி)

## மூன்று தமிழ்க் கட்சிகள் கூட்டாக அறிக்கை

கொழும்பு, மே 11

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக, சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் பேராசிரியர் திஸ்ஸவிதாரணவின் முன்மொழிவுகளை ஆரம்ப ஆலோசனைகளாகக்கொண்டு இறுதித் தீர்வைக் கண்டறியும் கலந்துரையாடல்களை முன்னெடுக்க வேண்டும் என்று மூன்று தமிழ்க் கட்சிகள் கூட்டாகக் கோரிக்கை விடுத்துள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (பத்மநாபா அணி) ஆகியன இணைந்து விடுத்துள்ள கூட்டறிக்கையிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இனப்பிரச்சினைத் தீர்வுக்காக பல்வேறு கட்சிகளும் முன்வைத்த தீர்வுகளை ஆராய்ந்த பின்னர் இந்த கோரிக்கையை தாம் விடுப்பதாக அக் கட்சிகளின் தலைவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இனப்பிரச்சினைத் தீர்வு விடயத்தில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஆதரவை அரசு பெற்றுக்கொள்வது மிக முக்கியமானது என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் சுதந்திரக் கட்சி முன்வைத்த, இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனைகளை இந்த மூன்று கட்சிகளும் நிராகரித்திருந்தன.

''அனுபவ ரீதியாகக் கடந்த கால சர்வகட்சி மாநாடுகள் காலத்தை இழுத்தடிக்கப் பயன்படுத்தப்பட்டமை வெளிப்படையான உண்மை. எனவே விரக்தியடைந்து தீர்வை ஆவலோடு எதிர்பார்த்திருக்கும் மக்களுக்கு, காலவரையறைக்குள் ஒரு அமைதித் தீர்வைக் கொண்டு வரக்கூடிய திட்டத்தை சர்வகட்சி பிரதிநிதிகள் குழு முன்வைக்க வேண்டும்'' என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## கோப்பாய் பிரதேச செயலகத்தில் முதியோர் அடையாள அட்டைகள்

யாழ்ப்பாணம்,மே 11

வலி.கிழக்கு, கோப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில் ஆயிரம் முதியோர்களுக்கு முதியோர் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளன.

அடையாள அட்டை வழங்குவதற்கான படிவங்களை கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் வழங்கி உள்ளது.

அடையாள அட்டைக்குரிய புகைப்படங்களை மிகக் குறைந்த செலவில் எடுப்பதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

அறுபது வயதுக்கு மேற்பட்டோர் அடையாள அட்டையைப் பெறுவதற்கு தத்தமது கிராம சேவையாளர் அல்லது பிரதேச செயலக சமூக சேவைகள் அலுவலருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(அ-1)

## கோட்டாபய - பௌச்சர் நேற்றுச் சந்தித்து பேச்சு

கொழும்பு, மே 11

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்க உதவி இராஜாங்கச் செயலாளர் றிச்சர்ட் பௌச்சர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும் ஜனாதிபதியின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷவைச் சந்தித்துப் பேசினார். பாதுகாப்பு அமைச்சில் நேற்றுக் காலை இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ரொபேர்ட் ஓ பிளேக்கும் இந்தச் சந்திப்பின் போது உடனிருந்தார்.

(சி)

## நாளை

| | |
|---|---|
| சித்திரை - 29 | சனிக்கிழமை 12.05.2007 |
| திதி: தசமி | பிற்பகல் : 01.16 |
| நட்சத்திரம்: | பூரட்டாதி பின்னிரவு : 11.35 |
| [illegible] | : 02.54 - 04.24 |
| ராகுகாலம் | : 08.54 - 10.24 |

## விடுதி வசதி இல்லாததால் பல்கலை. மாணவிகள் தனியார் கட்டடத்துக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,மே 11

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆனந்தகுமாரசாமி விடுதியில் தங்கியிருந்த மாணவிகள் நேற்று வேறு தனியார் கட்டடம் ஒன்றுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாணவிகள் வழமையாகத் தங்கும் பாலசிங்கம் விடுதியில் போதிய இடவசதி இல்லாத நிலையில் ஒரு சாரார், மாணவிகள் தங்கியுள்ள ஆனந்தகுமாரசாமி விடுதியில் சில காலம் தங்கவைக்கப்பட்டனர்.

நேற்று முதல் இவர்கள் வண்ணார் பண்ணையில் உள்ள கட்டடத் தொகுதிக்கு மாற்றப்பட்டுள்ளனர். (அ-68)

## நல்லூரில் நாளை கலை இலக்கிய விழா

யாழ்ப்பாணம்,மே.11

யாழ்மாவட்ட கலை கலாசாரப் பேரவை நடத்தும் 2006ஆம் ஆண்டுக்கான கலை இலக்கியப் பெருவிழா நாளைசனிக்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் துர்க்காமணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் மாவட்ட கலாசாரப்பேரவை உபதலைவருமான ஆ.சிவசுவாமி தலைமையில் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்கஅதிபரும் யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவைத் தலைவருமான க.கணேஷ் கலந்துகொள்ளவுள்ளார்.

ஆசியுரையை துர்க்காதுரந்தரி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்கவுள்ளார். மற்றும் கலைநிகழ்வுகள், பட்டிமன்றம் என்பனவும் விழாவில் இடம்பெறவுள்ளன.

(1-68)

## பத்திரிகையாளர் முறைப்பாடு செய்ய சுதந்திர ஊடக இயக்கம் விசேட ஏற்பாடு

யாழ்ப்பாணம்,மே 11

குடாநாட்டில் பத்திரிகையாளர்களுக்கு எதிரான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டால், உடன் முறைப்பாடுகளைச் செய்[illegible] விசேட ஏற்பாடுகளை சுதந்திர ஊடக இயக்கம் செய்துள்ளது.

ஊடகவியலாளர் தாக்கப்பட்டால் அல்லது அச்சுறுத்தப்பட்டால் உடனடியாக 0777289289 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தகவல் தருமாறு அந்த இயக்கம் கேட்டுள்ளது.

மூன்று மொழிகளிலும் விரும்பிய மொழியில் தகவல் வழங்க முடியும் என்றும் - அதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(அ-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாளுமன்றத்தில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

'பயங்கரவாதத்தை ஆதரிக்கவோ, பிரிவினை வாதத்தை ஆதரிக்கவோ, வன்முறைகளை ஆதரிக்கவோ அல்லது அவ்வாறான செயல்களில் ஈடுபடவோ பேசவோ மாட்டோம்'' என சத்தியப் பிரமாணம் செய்துவிட்டு இந்த சபைக்கு வந்த கஜேந்திரன் இன்று அதற்கு எதிர்மாறாக செயல்பட்டுள்ளார். நாட்டின் இறைமையையும், அரசமைப்பையும் உதாசீனப்படுத்தியுள்ளார்.

''இவருடைய நடவடிக்கைகள் நாடாளுமன்றத்தில் இருக்கும் சபாநாயகர் உட்பட 225 உறுப்பினர்களுக்கும் பெரும் அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளது.

''எம்மிடம் வான்படை, கடற்படை, தரைப்படை என முறையான இராணுவக் கட்டமைப்பு உண்டு.

பொதுமக்கள் மீதோ அல்லது இந்தியாவின் மீதோ தாக்குதல்களை நடத்தமாட்டோம். ஆனால் பொருளாதார மையங்கள் மற்றும் குறித்த இலக்குகள் மீதும் தான் தாக்குதல்களை நடத்துவோம் என்று இச்சபையில் எச்சரிக்கை விடுத்தார்.

''கஜேந்திரன் ஒரு சாதாரண பிரஜையாக இருந்து பொது இடம் ஒன்றில் இப்படிப் பேசி இருந்தால் அவரைப் பொலிஸார் உடனடியாகக் கைது செய்திருப்பர்.

**நாம் மௌனம் சாதிக்க வேண்டுமா?**

''ஆனால் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து கொண்டு இப்படிப் பேசுவதை அனுமதிக்க முடியாது.

''இதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துள்ளது? நாடாளுமன்றத்தில் இருந்து கொண்டே பயங்கரவாத அச்சுறுத்தல் விடுக்கின்றார். நாம் தொடர்ந்தும் மௌனம் சாதித்துக் கொண்டிருக்க வேண்டுமா?

''சிறு வண்டுகள் போன்று இரண்டு விமானங்களை வைத்துக் கொண்டு வீராப்புப் பேசுகின்றனர். பிரதமரும், பாதுகாப்பு அமைச்சரும் என்ன செய்கின்றனர்? நாட்டின் பாதுகாப்புக் கருதி கஜேந்திரன் உடனடியாக கைதுசெய்யப்படவேண்டும். அவரது நாடாளுமன்ற உறுப்புரிமை பறிக்கப்படவேண்டும்'' என விமல் வீரவன்ஸ கோரிக்கை விடுத்தார்.

இதனை ஆதரித்து தொழில் உறவுகள் பிரதி அமைச்சர் டாக்டர் மேர்வின் சில்வா உரையாற்றினார்.

''கஜேந்திரன் ஒரு புலி. அவரை இந்த சபைக்குள் இருக்கவிடக்கூடாது. அவரது எம். பி. பதவி பறிக்கப்படவேண்டும். சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும். உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்'' என ஆக்ரோஷமாகப் பேசினார் பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா.

இந்த விவகாரம் தொடர்பாக அரச தரப்பில் நாடாளுமன்ற கொரடாவும் அமைச்சருமான ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே சில கருத்துகளை முன்வைத்தார்.

''எல்லோரும் சத்தம் போட்டுக் கூறுவதால் ஒரு நாடாளுமன்ற உறுப்பினரை கைது செய்யவோ அல்லது நாடாளுமன்றத்தில் இருந்து வெளியேற்றவோ முடியாது.

''நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகளும் சிறப்புரிமை ஏற்பாடுகளும் இதற்கு இடமளிக்காது'' என அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே கூறினார்.

அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோ புள்ளேயின் கூற்றை நகர அபிவிருத்தி அமைச்சர் தினேஷ் குணவர்தன கடுமையாக எதிர்த்தார்.

நாடாளுமன்ற வரலாற்றில் என்றுமே இல்லாத வகையில் கஜேந்திரன் இந்த சபையில் உரையாற்றினார். இந்தியா மீது குண்டு போடமாட்டோம். இங்கு குறித்த இலக்குகள் மீது தாக்குதல் நடத்துவோம் என்கிறார். இதில் உள்ள விபரீதங்களை உணரவேண்டும். சபாநாயகர் தனக்குரிய அதிகாரங்களை உபயோகித்து கஜேந்திரனுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும். '' - என வற்புறுத்தினார் அமைச்சர் தினேஷ் குணவர்தன.

**எழுந்து நின்று கோஷம் எழுப்பினர்**

அப்போது குறுக்கிட்ட சபாநாயகர்-

உங்களுடைய ஆதங்கம் எனக்குப் புரிகின்றது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்தச் சபையில் தமது கருத்துகளை வெளிப்படுத்தலாம். சுதந்திரமாகப் பேசலாம். நிலையியல் கட்டளைகளின்படி நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை பாதுகப்பளிக்கின் றது என்று விளக்கம் அளித்தார்.

சபாநாயகரின் கூற்றை விமல் வீரவன்ஸ நிராக்ரித்தார்.

தனி ஒரு மனிதரின் சிறப்புரிமையைப் பாதுகாப்பதற்காக 225 உறுப்பினர்களைப் பணயம் வைக்க முடியாது. சிறப்புரிமையை விட அரசமைப்பே உயர்வானது.

எனவே அரசமைப்பின் ஆறாவது திருத்தச் சட்டத்தின் படி கஜேந்திரன் எம். பியை நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற்ற வேண்டும். - என மீண்டும் மீண்டும் கூறினார்.

ஆளும் கட்சி உறுப்பினர்கள் சிலரும் ஜே. வி. பி. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று கஜேந்திரனை கைது செய்ய வேண்டும் என்று கோஷம் எழுப்பினர்.

ஐ. தே. க. சார்பில் ஜோசப் மைக்கல் பெரேரா சில கருத்துக்களை முன்வைத்தார்.

இந்த நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று உண்டு. ஆனால் நம்மில் சிலர் அதை ஏற்க மறுக்கின்றனர்.

பிரச்சினைகளைத் தீர்க்கப் பல வழிகள் இருக்கின்றன. பேசித் தீர்க்க முடியும். ஆனால் பயங்கரவாதத்தின் மூலம் தீர்த்து விட முடியாது. அதற்கு இடம் கொடுக்கவும் முடியாது.

**நாட்டைத் துண்டாட இடமளிக்க முடியாது**

புலிகளிடம் இப்படியான ஒரு சக்தி உண்டு என்பது இப்பொழுது வெளிச்சமாகி விட்டது.

குறிப்பிட்ட இலக்குகளைத் தாக்குவோம் என்கின்றனர். இதனால் நாட்டு மக்கள் பெரும் பீதிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

இது ஒரே நாடு. யுத்தத்தின் மூலமோ அல்லது பயங்கரவாத நடவடிக்கைகளின் மூலமோ நாட்டைத் துண்டாட இடமளிக்க முடியாது.

சிறப்புரிமைகளை கௌரவப்படுத்துவதற்காக அரசமைப்பை உதாசீனப் படுத்திவிடக் கூடாது.

கஜேந்திரனின் பேச்சு மிகவும் பாரதூரமானது. புலிகள் பொருளாதார மையங்கள் மீது மட்டுமின்றி பாடசாலைகள், வைத்தியசாலைகள் ஏன் இந்த நாடாளுமன்றின் மீதும் குண்டு போடலாம். அப்போது என்ன? எனவே சபாநாயகர் தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என ஆலோசனை கூறினார் - ஜோசப் மைக்கல் பெரேரா.

சுகாதார அமைச்சரும் சபை முதல்வருமான நிமல் சிறிபால டி சில்வா மேலும் ஒரு விளக்கம் அளித்தார்.

அரசமைப்பின் ஆறாவது திருத்தச்சட்டத்தின் படி சத்தியம் செய்ய மறுத்தே கூட்டணி உறுப்பினர் களான அமிர்தலிங்கம் போன்றோர் இந்த நாடாளு மன்றத்தை விட்டு வெளியேறினர்.

ஆனால் கஜேந்திரன் ஆறாவது திருத்தத்தின்படி சத்தியம் செய்துவிட்டு, இங்கே அதற்கு முரணாக நடந்துகொள்கின்றார். எனவே, இந்த விடயம் தொடர்பாக சபாநாயகர் சட்டமா அதிபரின் ஆலோசனையைப் பெற்று உரிய நடவடிக்கை எடுக்கலாம் என ஆலோசனை கூறினார்.

இதனை அமைச்சர்களான மனோ விஜேரத்ன, ஹேமகுமார நாணயக்கார, மேர்வின் சில்வா உட்பட ஜே. வி. பியினர் அனைவரும் ஆட்சேபித்த னர்.

...ங்கரவாதி ஒருவர் இந்தச் சபையில் அமர்ந்து ...ண்டு பிரிவினைவாதம் பேசுகின்றார். நாம் அமைதியாக இருக்க முடியாது எனக் கூச்சல் போட்டனர்.

சபையில் அமைதி ஏற்படாதநினால் சபாநாயகர் சுமார் 10.45 மணிக்கு சபை அமர்வுகளை இடை நிறுத்தி கட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டி சபையை ஒத்திவைத்தார்.

எல்லாக் கட்சிகளின் தலைவர்களும் சபையில் இருக்கும் போது தனியாக ஒரு கூட்டம் தேவையில்லை. இங்கேயே தீர்மானிக்க முடியும் எனக் கூறி ஜே. வி. பியினர் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை.

**வாபஸ் பெற்று வருத்தம் தெரிவிக்குமாறு உத்தரவிட்டார் சபாநாயகர்**

சபை மீண்டும் 11 மணிக்கு கூடியபோது சபாநாயகர் ஒரு அறிவித்தலை வெளியிட்டார்.

அரசமைப்பின் 157 ஆம் பிரிவின் 3 ஆவது உப பிரிவின்படி எவரும் இலங்கையின் அரசமைப்பை உதாசீனப்படுத்த முடியாது.

பயங்கரவாத நடவடிக்கைகள் மூலமோ அல் லது வேறு ஏதாவது செயற்பாடுகளின் மூலம் நாட் டைத் துண்டாடவோ தனிநாடு ஒன்றை உருவாக் கவோ முடியாது.

மீறும் பட்சத்தில் அவர்களுக்கு ஏழு ஆண்டு காலம் அரசியல் குடியுரிமை பறிப்பதுடன் அவரதும் அவரது குடும்பத்தினரதும் உடைமைகளையும் சொத்துகளையும் பறிமுதல் செய்யமுடியும்.

மேலும் 77 ஆவது பிரிவின்படி நாடாளுமன்றம் நடவடிக்கை எடுக்கவும் இடமுண்டு. எனவே இங்கு பேசுபவர்கள் பொறுப்புடன் பேசவேண்டும். இந்தச் சந்தர்ப்பத்தில் கூட்டமைப்பு உறுப்பினர் கஜேந் திரன் தனது பேச்சை வாபஸ் பெற்றுக்கொண்டு அதற்கு வருத்தம் தெரிவிக்க வேண்டும் என சபாநாயகர் உத் தரவிட்டார்.

சபாநாயகரின் வேண்டுகோளின்படி கஜேந்திரன் எம். பி. தனது நிலைப்பாட்டை வெளிப்படுத்தினார்.

''இலங்கையின் அரசபடைகள் மேற்கொள்ளும் தாக்குதல்களையும் அதனால் ஏற்படும் பேரழிவுகளையும் நேரில் கண்டவன் நான். நானும் எனது உறவுகளும் நேரடியாகவே பாதிக்கப்பட்டவர்கள். இந்தப் பாதிப்புகளால் ஏற்பட்ட உத்வேகம் தான் என்னை அப்படி உணர்ச்சிவசப் படுத்திவிட்டது. தனிப்பட்ட முறையில் சிங்களவர்களையோ வேறு எவரையுமோ பாதிக்கும் வகையில் பேசவில்லை'' என்று கூறிவிட்டு கஜேந்திரன் அமர்ந்து விட்டார்.

இதனை ஜே. வி. பியினர் ஏற்கவில்லை. கஜேந்திரன் இப்போதும் கூட வருத்தம் தெரிவிக்கவோ, பேச்சை வாபஸ் பெறவோ இல்லை. எனவே உடனடியாக அவரைக் கைது செய்யவேண்டும். சபையில் இருந்து வெளியேற்ற வேண்டும் எனக் கூச்சல் போட்டனர்.

**வெளியேற்றும் பொறுப்பை தம்மிடம் தரக் கோரினார் மேர்வின்**

பிரதி அமைச்சர் மேர்வின் சில்வா சபாநாயகரைப் பார்த்து ''ஐயா உங்களால் முடியாவிட்டால் அப் பொறுப்பை என்னிடம் தாருங்கள். நான் நடவடிக்கை எடுக்கின்றேன்'' என்று கூச்சல் போட்டார்.

சபையில் சத்தமாகப் பேசுவதாலோ கூச்சல் போடுவதாலோ ஓர் உறுப்பினரைக் கைது செய்யவோ அல்லது உறுப்புரிமையைப் பறிக்கவோ முடியாது என சபாநாயகர்பதில் அடி கொடுத்தார்.

**கட்சியின் சார்பில் வருத்தம் தெரிவித்தார் மாவை**

'ஐயா! கஜேந்திரன் எம். பி. தனது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்திவிட்டார். கட்சியின் சார்பில் நான் ஒன்றைக் கூறுகின்றேன். அவருடைய பேச்சு எவரது மனதையும் புண்படுத்தியிருந்தால் கட்சி யின் சார்பில் வருத்தம் தெரிவித்துக் கொள்கிறேன்.' - என்றார் மாவை சேனாதிராஜா.

அதனையும் எவரும் ஏற்கவில்லை. 'கஜேந்திரனைக் கைது செய்' என்று கூச்சல் போட்டனர்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஸ்ரீல. மு. காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் கஜேந்திரன் எம். பியின் கூற்றை சபைக்கு தெளிவு படுத்தினார். அதுவும் பயன் அளிக்கவில்லை. கூச்சல் குழப்பம். எதுவும்கேட்கவில்லை; புரியவுமில்லை.

ஐயா, கஜேந்திரன் எம். பி. தனது நிலைப் பாட்டை விளக்கிவிட்டார். கட்சித் தலைவர் மாவை சேனாதிராஜா கட்சியின் சார்பில் வருத்தம் தெரிவித்துக் கொண்டார். இதற்கும் மேல் என்ன செய்வது என்று புரியவில்லை என்று கூறிவிட்டார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

சபாநாயகரின் உத்தரவின் படி கஜேந்திரன் மன்னிப்புக் கேட்கவேண்டும். தனது பேச்சை வாபஸ் பெறவேண்டும் என அமைச்சர் மனோ விஜேரத்ன ஆலோசனை கூறினார்.

அப்போது தனது முந்திய நிலைப்பாட்டை மீண்டும் அடித்துக் கூறிவிட்டு அமர்ந்து கொண்டார் கஜேந்திரன் எம். பி.

இதனால், 'சபாநாயகரின் உத்தரவை மீறியதாலும் அதனை நிறைவேற்றத் தவறியதாலும் நாடாளு மன்ற உறுப்பினர் கஜேந்திரன் இன்றைய அமர்வு களில் இருந்து (ஒருநாள் மட்டும்) வெளியேறும்படி உத்தரவிடுகின்றேன்.'' என சபாநாயகர் அறிவித் தார்.

மன்னிப்புக் கேட்க மறுத்த கஜேந்திரன் எம். பி. சபையில் இருந்து வெளியேறினார். (சி)


PC Park
No. 633, K.K.S. Road,
Jaffna. T.P. 021 222 9581.

★ 15" Panora Monitor - 13,000/-
★ LASER Jet HP - Tones 10500/-
★ ATX Power Supply 24 Pin - 450W - 1900/-
★ EPSON Ribbon - 650/-
★ INK Refill - 1500/-

மேலதிக விவரங்கள் 13.05.2007 ஞாயிறு உதயனில்?

அறிவொளி NALLUR
CHE .: அன்பழகன்
A/L - 09 Sat, Sun - 3.30pm
A/L - 08 - Inorganic : Sat., Sun 4.30 p.m.
Organic : Mon. - 3 p.m.
PHY. : K. செல்வன்
புலங்கள்: WED. 4 p.m.
BIO. : அல்போன்ஸ்
A/L - 09 Core BIOLOGY : Sat., Sun. 4 p.m.
A/L - 08 Func. Animal : Sat., Sun. 3 p.m.
C.Maths : ஸ்ரீதரன்
A/L - 07 repeat : Tue., Wed., Thu., 3 p.m.
சிவகரன்
Sat, Sun 3 p.m.


# குடாநாட்டில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து, அவர்களின் பசப்பு வார்த்தைகளை நம்பி, யுத்தப் பயிற்சி பெற்று, புத்தகப் பையினுள் ஆயுதங்களைக் கொண்டு செல்லல், கைத்துப்பாக்கி, கைக்குண்டு, கிளைமோர் ஆகியவற்றை மறைத்து வைத்திருத்தல், கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளுதல், வகுப்புப் பகிஷ்கரிப்புப் போராட்டம் செய்து ரயர், பஸ்களுக்குத் தீ வைத்தல், 'சாளரம்' வெளியீட்டை மாணவர்களுக்குப் பலாத்காரமாக விற்றல் போன்ற பயங்கரவாதச்செயற்பாடுகளில் ஈடுபட்டனர் எனத்தமது அமைப்புக்கு நம்பகரமான தகவல்கள் கிடைத்துள்ளன என்று அந்த அமைப்பு அத்துண்டுப் பிரசுரத்தில் தெரிவித்துள்ளது.

''உங்களைப் போன்ற தேசத் துரோகிகளுக்கு மரண தண்டனை வழங்க நாம் முடிவெடுத்துள்ளோம். ஆனால் நீங்கள் பாடசாலை மாணவர்கள் என்பதால் உங்களுக்கு ஒரே ஒரு சந்தர்ப்பம் வழங்கத் தீர்மானித்துள்ளோம்.

''பெற்றோர்களே, உங்கள் பிள்ளைகள் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட அனுமதிக்க வேண்டாம். அதிபர், ஆசிரியர்களே, மாணவர்களின் செயற்பாடுகளில் அவதானமாக இருங்கள். அவர்களுக்கு நல்வழி காட்டுங்கள்!'' - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு தொகை மாணவர்களுக்கு கொலை அச்சுறுத்தல் மற்றும் மரண தண்டனை எச்சரிக்கை தெரிவித்து பகிரங்கத் துண்டுப்பிரசுரம் வெளியாகியிருக்கின்றமை குடாநாட்டு கல்விச் சமூகத்தில் பெரும் பரபரப்பையும், அச்சத்தையும், பீதியையும் ஏற்படுத்தியிருக்கின்றது. (உ)

# இணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உதவி இராஜாங்கச் செயலர் றிச்சர்ட் பௌச்சர் தனது இலங்கை விஜயம் பற்றி இந்தக் கூட்டத்தில் கருத்துக்களைத் தெரிவித்தார் எனக் கூறப்படுகிறது. (சி)


விக்னா கல்வி நிறுவனம்
தலைமையகம் 52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
புவியியல்
N. பாபு
A/L 2008 - சூழல் முகாமைத்துவம்
Sat., Sun., 9-10 a.m.
A/L 2009 - இடவிளக்கவியற் படம் அமைத்தல்
Sat., Sun., 11-12 a.m.
ஆரம்பம்: 12.05.2007

கணக்கீடு
A/L :- 2009
ஆரம்ப அலகிலிருந்து
ஆரம்பம்
சனி 12 மணி
S. தவா
B.Com. (Hons)
(Acc.spl)
NEW SCIENCE COLLEGE JAFFNA.


# தமிழ்ச் சமூகத்தினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரிசனை கொண்டுள்ளது. இதுதொடர்பாக இலங்கை அரசின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இலங்கையில் மனித உரிமை மீறல், பத்திரிகையாளர் கொலை, பத்திரிகையாளர் மீதான அச்சுறுத்தல்கள், ஊடக சுதந்திரம், ஊடகங்கள் மீதான அழுத்தங்கள் ஆகியன தொடர்பாக அமெரிக்கா கரிசனை கொண்டுள்ளது. இவை தொடர்பாக நான் இலங்கை ஜனாதிபதியின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளேன்.

அரச கட்சியின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஆலோசனைகள் குறித்தும் பேசினோம். இது ஒரு நல்ல திருப்பமாகும். எவ்வாறாவது அனைத்துக் கட்சிகளும் இணைந்து ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் மூலமே இதற்குத் தீர்வுகாண முடியும். பேச்சுக்கள் இடை நிறுத்தப்பட்டிருப்பது இலங்கையின் எதிர்காலத்துக்கு நல்லதல்ல.

**பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட வேண்டும்**

பயங்கரவாதம் எவ்வகையிலாவது தோற்கடிக்கப் படவேண்டும். புலிகளின் தாக்குதல் காரணமாகவும் பொதுமக்கள் கொல்லப்படுகின்றனர். புலிகள் அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா, இந்தியா ஆகிய நாடுகளிலிருந்து ஆயுதங்களைப் பெறுகின்றனர். இந்த நாடுகளில் புலிகள் நிதி வசூலிப்பிலும் ஈடுபட்டுள்ளனர். இதுகுறித்து சர்வதேச ரீதியில் இலங்கை அரசு மேற்கொள்ளும் பிரசாரத்துக்கும் அமெரிக்கா ஆதரவு வழங்கும் - என்றார் பௌச்சர்.

''கருணா தரப்பும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. அந்த இயக்கத்தையும் தடைசெய்வீர்களா? தடை செய்யும்படி இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளிடம் வலியுறுத்துவீர்களா?'' என பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது, இதுகுறித்தும் ஆராயப்படுமென றிச்சர்ட் பௌச்சர் தெரிவித்தார். (அ-சி)

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை நவரட்ணசிங்கம்



[குட்டி மாமா - ஓய்வுபெற்ற கூட்டுறவுப் பரிசோதகரும் கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரிகளின் விரிவுரையாளரும்]

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும் காங்கேசன்துறை, தையிட்டியை வசிப்பிடமாகவும் இணுவில் வீதி, மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை நவரட்ணசிங்கம் 06.05.2007 ஞாயிற்றுக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும் மானிப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற ஆறுப்பிள்ளை (ஆறுமுகம் ஓவசியர்) - பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ஜீவாமிர்தத்தின் அன்புக் கணவரும் சிவா, தேவா, சிவாஜினி, றாஜினி, ஜீவா, லவா ஆகியோரின் பாசமிகு தந்தையும் சாந்தினி, கோமதி, குகதாஸ், பபிதா சுரேஸ் தாஸ், தேவகி ஆகியோரின் அன்பு மாமனும் தளையசிங்கம், காலஞ்சென்ற பாலசிங்கம் மற்றும் பவளேஸ்வரி, வன்னியசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சற்குணம், திருநாவுக்கரசு, தங்கமலர், யோகராசா ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மானிப்பாய் இணுவில் வீதி 'கோமதி வாசதில்' இன்று (11.05.2007) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆரம்பமாகி பிற்பகல் 4 மணிக்கு பிப்பிலி மயானத்தில் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*'கோமதி வாசம்',*
*இணுவில் வீதி, மானிப்பாய்.*
*021 222 3439.*

(60634)

தகவல்: மனைவி, பிள்ளைகள்.

## சண்முகம் வீரசிங்கம்



([illegible])

கைதடி தெற்கைச் சேர்ந்த சண்முகம் வீரசிங்கம் நேற்று (10.05.2007) வியாழக்கிழமை நண்பகல் இயற்கை எய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சண்முகம் - தில்லைப்பிள்ளை தம்பதியரின் மகனும், தெட்சணா கைலாயபதியின் பாசமிகு கணவரும் ரூபினி (ஜேர்மனி), காலஞ்சென்ற சிவரூபன் மற்றும் சிவாஜினி, தவராஜினி (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு தந்தையும் சிறீகரன் (ஜேர்மனி), தயாபரன் (மலேசியா), நரேந் திரன் (ஜேர்மனி) ஆகியோரது மாமனும் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் ஓய்வுபெற்ற ஆசிரியைகளான முத்தம்மா, சிவபாக்கியம், காலஞ்சென்ற விவேகானந்தன் மற்றும் நாகேஸ்வரி (ஆலோசக மருத்துவமாது - முல்லைத்தீவு), புஸ்பமலர் (டென்மார்க்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் செல்லையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னத்தம்பி (ஓய்வுபெற்ற கிராமிய வங்கி முகாமையாளர்) மற்றும் சிவசிதம்பரம் (ஓய்வு பெற்ற பரிசாரகர்), சிவபாலன் (டென்மார்க்), நாகேஸ்வரி, காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (முகாமையாளர், ப.நோ.கூ. சங்கம் கைதடி) மற்றும் விக்கினேஸ்வரன் (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனரும், கந்தையாவின் (ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தி. யாழ்) சகலனும் விநோதன், விசாளினி, விதுர்சிகா, அபிஷாளினி, சங்கீதன், நர்த்தனா ஆகியோரது அன்புப் பேரனுமாவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் பற்றி விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கைதடி தெற்கு, கைதடி.* (60638) *தகவல்: மனைவி.*

# 45ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பு



வைரமுத்து சிவகணேசதாசன் (பப்பாய்)

*அவனியில்: 10.12.1948*
*அக்கினியில்: 28.03.2007*



திருமதி சிவகணேசதாசன் சறோயினி

*அவனியில்: 05.02.1954*
*அக்கினியில்: 28.03.2007*

கடந்த 28.03.2007 புதன்கிழமை சிவபமடைந்த எங்கள் குடும்பத்தின் குலவிளக்குகள் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (11.05.2007) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் அத்தருணம் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவர்களின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

*'கணேசபதி'*
*கற்பகப்பிள்ளையார் கோயில் வீதி,*
*உரும்பிராய் வடக்கு, உரும்பிராய்.*

*குடும்பத்தினர்.*

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.05.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org